**வரைவு அறிக்கை!**

**ஸ்ரீ லங்கா கிரிக்கெட் மறுசீரமைப்பு குழு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்த அறிக்கை**

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் 2026 ஏப்ரல் 29ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஸ்ரீ லங்கா கிரிக்கெட் மறுசீரமைப்பு குழு (Cricket Transformation Committee – CTC), இலங்கை கிரிக்கெட்டை மாற்றியமைப்பதற்காக தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் இலங்கை மக்களுக்கு தொடர்ச்சியாகத் தகவல்களை வழங்குவது தங்கள் பொறுப்பு எனக் கருதுகிறது.

இக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு மூன்று முக்கிய துறைகளை மையமாகக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாகம் நிறுவப்படும் வரை, நல்லாட்சியை ஏற்படுத்துதல், களத்தில் சிறப்பான செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் அன்றாட இலங்கை கிரிக்கெட் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் என்பனவாகும். இவை அனைத்தும் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகம் ஒன்று நிறுவப்படும் வரையிலான காலப்பகுதியில் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, மேற்கண்ட பொறுப்புகளின் கீழ் இதுவரை எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்க மாற்றத்திற்கான குழு விரும்புகிறது.

**நிர்வாகம்**

நிர்வாகத் துறையில், மறுசீரமைப்பு குழு இரண்டு மாத காலத்திற்குள் புதிய அரசியலமைப்பொன்றை தயாரித்து, அதனை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது. தற்போது, அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

நவீன கிரிக்கெட்டின் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த முன்மொழியப்பட்ட அரசியலமைப்பு, இலங்கை

கிரிக்கெட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு நிலையான அடித்தளத்தை வழங்கும் எனக் குழு நம்புகிறது.

அத்துடன், சர்வதேச கிரிக்கெட் பேரவை (ICC), எமது மதிப்புமிக்க வர்த்தகப் பங்காளிகள், இலங்கை மக்கள் மற்றும் கிரிக்கெட் ரசிகர்கள் உள்ளிட்ட அனைத்து முக்கிய பங்குதாரர்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கட்டமைப்பையும் இது வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உள்நாட்டு கழகங்கள்

தற்போது 14 ஆக உள்ள Major Tier 'A' கழகங்களின் எண்ணிக்கையை அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10 ஆகக் குறைக்கவும், Tier 'B' பிரிவில் 12 கழகங்களைத் தொடர்ந்து பேணவும் இலங்கை கிரிக்கெட் மறுசீரமைப்பு குழு தீர்மானித்துள்ளது.

Tier 'A' கழகங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் நோக்கம், நாட்டின் சிறந்த வீரர்கள் மிக உயர்ந்த மட்டத்திலான உள்நாட்டு போட்டிகளில் ஒன்றாக விளையாடுவதை உறுதி செய்வதாகும்.

மேலும் போட்டித்தன்மை கொண்ட உள்நாட்டு கட்டமைப்பு, உள்நாட்டு கிரிக்கெட்டின் ஒட்டுமொத்த தரத்தை உயர்த்துவதுடன், தேசிய அணிகளுக்கான வீரர்களை உருவாக்கும் பாதையையும் மேலும் வலுப்படுத்தும் எனக் குழு கருதுகிறது.

## போட்டி அட்டவணை

Major Club Tier 'A' லீக் போட்டி, தற்போதைய மூன்று நாள் போட்டி முறைக்கு பதிலாக நான்கு நாட்கள் நடைபெறும் வகையில் மாற்றவும் மாற்றத்திற்கான குழு தீர்மானித்துள்ளது.

நான்கு நாள் போட்டி முறையானது, கிரிக்கெட்டின் உயரிய வடிவமான டெஸ்ட் கிரிக்கெட்டிற்குத் தேவையான சிறந்த தயார்படுத்தலை வீரர்களுக்கு வழங்கும் எனக் குழு நம்புகிறது.

மேலும், வீரர்களுக்கு உரிய ஓய்வு காலங்கள் உள்ளடக்கப்பட்ட தெளிவான மற்றும் கட்டமைக்கப்பட்ட உள்நாட்டு கிரிக்கெட் நாட்காட்டியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் மூலம் காயங்கள் மற்றும் வீரர்களின் உடல்/மன சோர்வு ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதுடன், கழகங்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஒளிபரப்பாளர்கள் தமது நடவடிக்கைகளை முன்கூட்டியே திட்டமிடுவதற்குத் தேவையான போதிய கால அவகாசமும் கிடைக்கும்.

எதிர்காலத்தில் தேசிய அணிக்காக விளையாடக்கூடிய திறமைகளை அடையாளம் கண்டு வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் இலங்கை பாடசாலை கிரிக்கெட் போட்டித் தொடரையும் மறுசீரமைப்பதற்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## ஆடுகளங்களின் தரத்தை உயர்த்துதல்

நாடு முழுவதும் உள்ள கிரிக்கெட் ஆடுகளங்களின் தரத்தை மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் முன்னாள் தலைமை ஆடுகளப் பராமரிப்பாளரான திரு. Andy Atkinson தலைமையில் நடைபெற்ற சுயாதீன நேர்முகத் தேர்வு செயல்முறையைத் தொடர்ந்து, அனுபவமிக்க தேசிய ஆடுகளப் பராமரிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இலங்கை கிரிக்கெட்டின் சர்வதேச போட்டிகள் நடைபெறும் மைதானங்களில் பணியாற்றும் அனைத்து ஆடுகளப் பராமரிப்பாளர்களும் தற்போது இலங்கை கிரிக்கெட்டினால் நேரடியாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் ஆடுகளப் பராமரிப்புப் பிரிவின் மீது இலங்கை கிரிக்கெட்டிற்கு அதிக நேரடி நிர்வாக அதிகாரம் கிடைப்பதுடன், இலங்கை கிரிக்கெட்டை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் பரந்த நோக்கத்திற்கு அமைவாக ஆடுகளங்களைத் தயாரிப்பதற்கும் இது உதவும்.

## பயிற்றுவிப்பின் தரத்தை உயர்த்துதல்

மாவட்ட மற்றும் மாகாண மட்ட பயிற்றுவிப்பு கட்டமைப்புகளில் பயிற்றுவிப்பின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை கிரிக்கெட் மாற்றத்திற்கான குழு தற்போது மேற்கொண்டு வருகிறது.

கடுமையான நேர்முகத் தேர்வு செயல்முறையைத் தொடர்ந்து, புதிய மாவட்ட மற்றும் மாகாண பயிற்றுவிப்பாளர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த

நேர்முகத் தேர்வுகள் உலகளவில் புகழ்பெற்ற பயிற்றுவிப்பாளர் மேம்பாட்டு நிபுணரான திரு. Ashley Ross அவர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டன.

இலங்கை கிரிக்கெட்டின் உயர் செயல்திறன் மையத்தின் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த பயிற்றுவிப்பு அமைப்பு, அதில் உள்ள பயிற்றுவிப்பு திறன்கள் உள்ளிட்டவற்றை மறுபரிசீலனை செய்வதிலும், தேவையான இடங்களில் அந்தக் கட்டமைப்பை மறுசீரமைப்பதிலும் திரு. Ross உதவி செய்து வருகிறார்.

மாவட்ட மற்றும் மாகாண பயிற்றுவிப்பாளர்களை இலங்கை கிரிக்கெட்டின் நேரடி பணியாளர்களாக கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளையும் CTC மேற்கொண்டுள்ளது.

இதன் மூலம் பயிற்றுவிப்பு செயல்முறைகள் மற்றும் அதன் முடிவுகள் தொடர்பில் அதிக கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறலை இலங்கை கிரிக்கெட் உறுதி செய்ய முடியும்.

### நடுவர் மற்றும் போட்டி நடுவர் தரத்தை உயர்த்துதல்

பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரையிலான அனைத்து நிலைகளிலும் நடுவர்கள் மற்றும் போட்டி நடுவர்களின் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கிரிக்கெட்டின் ஒவ்வொரு மட்டத்திலும் தரத்தை உயர்த்தும் குழுவின் பரந்த நோக்கத்துடன் இந்த நடவடிக்கை இணைந்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, முன்னாள் ICC நடுவரான திரு. Lyndon Hannibal, நடுவர் மேம்பாட்டு முகாமையாளராகவும், முன்னாள் ICC நடுவரான திரு. Ruchira Palliyaguruge, நடுவர் பயிற்றுவிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை கிரிக்கெட், கழக கிரிக்கெட் மற்றும் சர்வதேச கிரிக்கெட் ஆகியவற்றை உள்ளடக்கிய கிரிக்கெட் பாதையின் அனைத்து மட்டங்களிலும் நடுவர்கள் மற்றும் போட்டி நடுவர்கள் உள்ளிட்ட போட்டி அதிகாரிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் உயர்த்துவதற்கும் அவர்கள் பணியாற்றுவார்கள்.

### விளையாட்டு மருத்துவம் மற்றும் வீரர் நலத் தரத்தை உயர்த்துதல்

இலங்கை கிரிக்கெட்டின் விளையாட்டு மருத்துவப் பிரிவு, 1996 உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியுடன் உடற்பயிற்சி மருத்துவ நிபுணராக

பணியாற்றியவரும் பின்னர் Cricket Australia நிறுவனத்தின் முன்னணி உடற்பயிற்சி மருத்துவ நிபுணராகப் பணியாற்றியவருமான திரு. Alex Kontouris அவர்களின் உதவியுடன் மறுசீரமைக்கப்பட்டு வருகிறது.

வீரர்களுக்கான பராமரிப்பு மற்றும் விளையாட்டு மருத்துவ சேவைகள் சர்வதேச தரத்திற்கு ஏற்ப மேம்படுத்தப்படுவதை உறுதி செய்வதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

மேலும், தேசிய ஆண்கள் அணியின் மனத் திறன்கள் மற்றும் உளவியல் ரீதியான தயார்படுத்தலை வலுப்படுத்தும் வகையில், விளையாட்டு உளவியலாளர் ஒருவரும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

## மகளிர் கிரிக்கெட்டின் முக்கியத்துவத்தை உயர்த்துதல்

மகளிர் கிரிக்கெட்டை மேலும் மேம்படுத்தி அதன் முக்கியத்துவத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளையும் இலங்கை கிரிக்கெட் மாற்றத்திற்கான குழு மேற்கொண்டுள்ளது.

மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகளின் தொழில்முறை வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதுடன், ஒட்டுமொத்த மகளிர் கிரிக்கெட் திட்டத்தையும் வலுப்படுத்தும் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக, ஊடகம் மற்றும் தொடர்பாடல் திறன் மேம்பாடு உள்ளிட்ட பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நிதி முகாமைத்துவம்

செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் இலங்கை கிரிக்கெட்டின் நிதியை பொறுப்புடன் நிர்வகிப்பதை உறுதி செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேவையற்ற செலவினங்களைக் குறைத்து, நிதி வளங்கள் மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதில் தேவையற்ற சட்ட நடவடிக்கைகளிலிருந்து விலகுதல், தேவையற்ற ஆலோசகர்களின் சேவைகளை நிறுத்துதல், தெளிவான பொறுப்புகள் வரையறுக்கப்படாமல் தொடர்ந்த பதவிகளை நீக்குவதன் மூலம் பணியாளர்

கட்டமைப்பை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அளவுக்கு அதிகமாக இருந்த பயிற்றுவிப்பு கட்டமைப்பின் அளவைக் குறைத்தல் ஆகியவை அடங்குகின்றன.

இந்த நடவடிக்கைகள் நிதி விரயத்தைக் குறைத்து, வீரர் மேம்பாடு மற்றும் கிரிக்கெட் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக அதிக நிதி வளங்களை ஒதுக்குவதற்கு உதவும் எனக் குழு நம்புகிறது.

**நிவாரணம்**

முந்தைய நிர்வாகங்களின் காலப்பகுதியில் நியாயமற்ற முறையில் தண்டிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் ஊழியர்கள் மற்றும் கழகங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் குழு மேற்கொண்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட், அதன் ஊழியர்கள், உறுப்பினர் கழகங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வை வலுப்படுத்தி, நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

**முடிவு**

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகள், இலங்கை கிரிக்கெட்டை மாற்றியமைப்பதற்கும், அனைத்து மட்டங்களிலும் கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்புகளை மீளக் கட்டியெழுப்புவதற்குமான முக்கியமான படிகளாகும் என இலங்கை கிரிக்கெட் மறுசீரமைப்பு குழு நம்புகிறது.

இலங்கை கிரிக்கெட் மீண்டும் உலகத் தரம் வாய்ந்த கிரிக்கெட் அமைப்பாகவும், உலகளவில் மதிக்கப்படும் கிரிக்கெட் வர்த்தகப் பெயராகவும் உருவெடுப்பதற்கான அடித்தளத்தை அமைப்பதே குழுவின் நோக்கமாகும்.

மாற்றத்திற்கான செயல்முறை முன்னெடுக்கப்படும் நிலையில், மேலும் பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும்.

இலங்கை கிரிக்கெட் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கும், முன்னேற்றங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு தொடர்ச்சியாகத் தகவல்களை வழங்குவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து தொடர்ச்சியான ஈடுபாட்டையும் கருத்துப் பரிமாற்றத்தையும் குழு வரவேற்கிறது.